**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

Calendar )
)
Miscellaneous )
) Case No. STC.753/2023
Preliminary Register )
)
Sessions )

Deposition of witness for Prosecution pw8
Defence
Court

Name : குருசாமி

Father's Name :

Village :

Taluk :

Age :

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணையில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு வேலை செய்து வருகிறேன். 14.03.2023ம் தேதி மாலை 05.30 முதல் 05.45 மணியளவில் போலீஸ் ஸ்டேசன் பஸ் ஸ்டாப் அருகே கூட்டமாக இருந்தது, போலீசார் சங்கர் என்பவரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். விசாரணையின் போது சங்கர் பூட்டை உடைத்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் அவர் விசாரணையில் கோவில் பூட்டை உடைப்பதற்காக மூர்த்தி என்பவரது வெல்ட்டிங் பட்டறைக்கு சென்று சுத்தியல் வாங்கி வந்ததாக சங்கர் கூறினார்.

2) அங்காள ஈஸ்வரி கோவில் அருகே உள்ள வேலியிலிருந்து சுமார் 3 உடைந்த பூட்டுகளை சங்கர் எடுத்து போலீசாரிடம் தாக்கல் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள M.Gurusamy என்ற கையொப்பம்

**அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம்மான M.Gurusamy என்ற கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) கைப்பற்றப்பட்ட 3 உடைந்த நிலையில் உள்ள பூட்டுக்கள் **சா.பொ.1 முதல் 3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை</u>**

1) போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. போலீஸ் ஸ்டேசன் பஸ் ஸ்டாப்பில் சுமார் 20 பேர்கள் சம்பவம் நடந்த அன்று இருந்திருப்பார்களா என்றால் சுமார் 10 முதல் 20 பேர்கள் இருந்திருப்பார்கள். நான் அச்சமயத்தில் எவ்வளவு நேரம் அங்கு நின்று கொண்டிருந்தேன் என்றால் சுமார் கால் மணி நேரம் இருந்திருப்பேன்.

2) பூட்டானது எந்த கம்பெனியை சார்ந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பூட்டை கைப்பற்றிய பின்னர் என்னை காவல் நிலையம் வரவழைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். பூட்டை எதிரியான சங்கர் உடைத்ததை குறித்து எந்த காவலர் எழுதினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

3) நான் சொல்லுவது போல் 1ம் எதிரியான சங்கர் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதன் பொருட்டு எவ்வித பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முனியசாமி என்பவரது தரப்பை சார்ந்தவர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.